# ஓரியண்ட் பிஎல்டிசி மின் விசிறிகள் அறிமுகம்

# 50 சதவீதம் மின் சேமிப்பு

சென்னை, மார்ச் 13-
சிகே பிர்லாவின் ஓர் அங்கமான ஓரியண்ட் எலெக்ட்ரிக் 50 சதவீதம் மின் சேமிப்பு செய்யும் பிஎல்டிசி (பிரஷ்லெஸ் டிரெக்ட் கரெண்ட் மோட்டார்) என்னும் நவீன தொழில்நுட்பத்தில் ரிமோட்டுடன் கூடிய மின் விசிறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அறிமுக நிகழ்ச்சியில் ஓரியண்ட் எலெக்ட்ரிக் சிஇஓ ராகேஷ் கன்னா கூறுகையில் நவீன வாழ்க்கை வாழும் வாடிக்கையாளர் ஒவ்வொரு நிலையிலும் அவர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதுடன் பாதுகாப்பான உயர்தர வாழ்வியல் தீர்வுகளை வழங்க வேண்டும் என்பதை ஓரியண்ட் எலெக்ட்ரிக் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்விட்ச் டு ஸ்மார்ட் என்னும் எங்கள் பிராண்ட் உறுதிமொழிக்கான பொருள் எங்களது ஒவ்வொரு தயாரிப்பும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டிருப்பதுடன் சுற்றுச்சூழலுக்கு நட்பாகவும் கலை அழகுடன் மிளர்வதுமே ஆகும் என்றார்.

ஓரியண்ட் எலெக்ட்ரிக் மின் விசிறிகள் வணிகப் பிரிவுத் தலைவர் அனிந்த்யா தாஸ் பேசுகையில் சென்னை எங்களைப் பொருத்தவரை மிக முக்கியமான மற்றும் பெருமைமிகு சந்தையாகும். எனவே இச்சந்தையின் தேவைகளை நிறைவு செய்ய நாங்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டோம். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தபட்சம் 2 அல்லது 3 மின் விசிறிகள் நாளொன்றுக்குப் 16 மணி நேரம் ஆண்டு முழுவதும் ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே மிக வேகமான சுழற்சியிலும் மின் சிக்கனம் தரும் மின் சிக்கனம் தரும் மின் விசிறிகளை உறுவாக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அதி வேகத்தில் கூடுதல் காற்றைக் தருவதுடன் மின் செலவைச் சரி பாதியாகக் குறைக்கும் பிஎல்டிசி தொழில்நுட்பத்தில் இயங்கும் மின் விசிறிகளை வடிவமைத்தோம். சென்னை போன்ற மெட்ரோ நகரங்களில் 3.5 மிலியனுக்கும் அதிகமான மின் விசிறிகள் உள்ளதால் இவை அனைத்தும் பிஎல்டிசி தொழில்நுட்பத்திற்கு மாறினால் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 750 மெகாவாட் அளவிற்கு மின் நுகர்வு குறையும் என கூறினார்.